**கொழும்பு பல்கலைக்கழகத்தின் கீழ் இணைந்துள்ள விவசாய மற்றும் தொழிநுட்ப நிறுவனம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தினகீழ் இணைந்துள்ள விவாசாய மற்றும் தொழிநுட்ப நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107 (5) ஆவது உபபிரிவு மற்றும் 18 ஆவது பிரவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள 1980 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனங்களின் ஒழுங்குவிதிகளில் 20 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தில் 108(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்ந்து நிறுவனத்தின், 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு

செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையாமை

| உரிய தரநியமங்களுக்கு ஒழுங்கமையாமை | முகாமத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவினம் ரூபா. 12,039,944 தொகையிலான நடைமுறையல்லாத சொத்துக்கள் முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை பொது துறை கணக்கீட்டு தரநியமம் 03 பிரகாரம திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தங்களது அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். மதிப்பீட்டு அறிக்கை தாமதமாகி கிடைக்கப்பெற்றதால் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்குகளில் சீராக்குவதற்கு இயலவில்லை. மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் 2020 இறுதி அறிக்கைகளில் செவ்வையாக உள்ளடக்குகின்றேன். | இலங்கை பொது துறை கணக்கீட்டு தரநியமங்கள் படி பணியாற்றுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தால் பணிக்கொடை கணக்கிடுகையில் பின்பற்றியிருந்த கொள்கை பிரகாரம், பணிக்கொடை செவ்வையாக கணக்கிடப்படாமை காரணமாக மீள்யாவிற்கான ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா.36,013 ஆல் குறைவாகவும், நிதி செயலாற்றுகை கூற்றில் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா.273,589 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. அதேபோன்று கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பணிக்கொடை கொடுப்பனவாக வருடாந்த செலவினம் ரூபா.4,463,622 ஆல் அதாவது 362% ஆலும் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா. 5,648,563 ஆல் அதாவது 95% ஆலும் அதிகரித்திருப்பினும், இது தொடர்பாக இலங்கை பொது துறை கணக்கீட்டு தரநியமம் 03 பிரகாரம் மதிப்பிடப்பட்ட குறைப்பாடு தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | தங்களது அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். உரிய பெறுமதிகள் 2020 இறுதி கணக்குகளில் சீராக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. உரிய வெளிப்படுத்தல்களில் 2020 கணக்குமூலம் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பணிக்கொடை செவ்வையாக கணக்கிடுதல் வேண்டுமென்பதுடன், உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் விவசாய அமைச்சின் ஒதுக்கீடுகளின் மீது நடைமுறைப்படுத்தப்படும் விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியம்மூலம் விசாய தொழிநுட்பத்தை ஊக்குவிப்பதற்காக, நிறுவனத்தின் மாணவர்களிடையே வழங்கியிருந்த கடன் தொகையில் 14 மாணவர்களின் உடன்படிக்கை காலம் 2 ஆண்டுகள் தொடக்கம் 4 ஆண்டுகள் வரை கடந்திருப்பினும், மொத்தம் ரூபா.1,457,175 ஆன கடன் தொகை மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இணங்குகின்றேன். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைகள்மீது இந்த பணத்தொகை அறவிடுவதற்கு, கடன் பெறுபவர்கள் மற்றும் பிணையாளர்கள் ஆகியோருக்கு எதிராக சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்வதாக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பபட்டள்ளது. | உரிய கடன்தொகை துரிதமாக அறவிடு-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் நிதி ஒழுங்குவிதி 371 இற்கு ஒழுங்கமையாத வகையில் மீளாய்விற்கான ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் பதவிநிலை அலுவல-ர்களிடம் மொத்தம் ரூபா.154,900 ஆன முற்பணம் வழங்கியிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 18 ஆந் திகதியில் மொத்தம் ரூபா.240,000 ஆன முற்பணம் சீராக்குவதற்கு 30 – 140 நாட்களிலான காலவெல்லை எடுக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தில் பதவிநிலை அலுவலர்கள் இரண்டு பேர் மட்டும் இருந்தபடியால் முகாமைத்துவ சபையின் அனுமதிக்கமைவாக கல்விசார் பணியாற்தொகுதியின் மூன்று அலுவலர்களிடம் முற்பணம் வழங்கப்படுகிறது. ஊழியர்களின் பணி பகிஷ்கரிப்பு மற்றும் சீரற்ற காலநிலை நிலைமைகள் காரணமாக, தாவரச் செடிகளின் கொள்வனவு கட்டளைகளில் தாமதம் என்பன இந்த முற்பணம் சீராக்குவதல் தொடர்பான காலதாமதத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. | நிதி ஒழுங்குவிதிபடி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

**1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2008 ஒக்டோபர் மாதம் 16 ஆந் திகதிய 157 1/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 5 (ii) மற்றும் 5(iii) பிரிவுகள் | விதிமுறைகளின்படி கல்விசார் சபை மற்றும் கற்கைசார் சபை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை . | இணங்குகின்றேன். 2008 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தில் 13 ஆவது பிரிவில் கல்விசார் சபையின் பொருட்டு தேவையான அமைப்பு காட்டப்பட்டுள்ளதுடன் தேவையான உறுப்பினர் எண்ணிக்கை இல்லாமை காரணமாக இந்த கல்விசார் சபை மற்றும் கற்கைசார் சபை தாபித்தல் பணிகள் மேற்கொள்வது சிரமமாகும். | துரிதமாக தேவையான அனுமதிக்கமைவாக கல்விசார் மற்றும் கற்கைசார் சபை தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| ஆ) 1995 ஆம் ஆண்டு யூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக ஒதுக்கீட்டு ஆணைக்குழு சுற்றறிக்கை | பரீட்சை நடாத்திய திகதி தொடக்கம் 03 மாத காலப் பகுதிக்குள் அதன் பெறுபேறுகளை வழங்குதல் வேண்டும். ஆயினும் 2019 ஆம் ஆண்டில் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட 4 பரீட்சைகளின் பொருட்டு பெறுபேறுகள் வழங்குவதற்கு 2 - 2 ½ மாதங்கள் தாமதமடைந்திருந்தன | இணங்குகின்றேன். கல்விசார் பணியாற்தொகுதியினறுக்கு வேலை அதிகரிப்பு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், தாமதமாகி பெறுபேறுகள் வழங்குபவர்கள் பரீட்சைக்கான கொடுப்பனவுகளை பெறுவதற்கு தகைமை பெறமாட்டார்கள் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொளளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.6,993,247 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.4,019,352 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா.2,973,895 ஆன வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதல் உற்பத்தி நடவடிக்கைகளில் நட்டம் அடைவதற்கும், சம்பள செலவினங்களின் அதிகரித்தலும் காரணங்களாக இருந்தன.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் பிரதான தொழில்பாட்டு நடவடிக்கையான இழைமம் வளர்ப்பு உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை மூலம் 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் ஒழுங்கு முறையாக ரூபா.1,422,395 மற்றும் ரூபா. 12,370,640 ஆன நட்டத்தை அடைந்திருந்ததுடன், 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் அந்த நட்டம் ரூபா.10,948,245 ஆல் அதாவது 770 % ஆல் அதிகரித்திருந்தது. இதற்காக ஊழியர் சம்பளம் அதிகரித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குறைவடைதல் போன்றவை காரணங்களாக அமைந்திருப்பினும், சந்தைப்படுத்தலை அதிகரிக்கும் நிகழ்ச்சியொன்றை முகாமைத்துவம் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | இணங்குகின்றேன். இந்த நிலைமை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நேரடி ஊழியர் சம்பள செலவு அதிகரித்தல், விற்பனை வருமானம் 48% ஆல் குறைவடைதல் மற்றும் வாழை இழைமம் வளர்ச்சிக்காக கேள்விகளின் ஏற்றத்தாழ்வுகள் அடிப்படை காரணமாகியது. | பிரதான தொழில்பாட்டு வருமானத்தை விருத்தி செய்து கொள்வதற்கு தேவையான நிகழ்ச்சித் திட்டம் அடையாளம் காண்பதற்கு பணியாற்றுதல் வேண்டும். |